Government of South Australia

# தெற்கு ஆஸ்திரேலிய பன்முகக் கலாச்சார சாசனம்

*தெற்கு ஆஸ்திரேலிய பன்முகக் கலாச்சாரச் சட்டம் 2021 (The South Australian Multicultural Act 2021) என்பது, பன்முகக் கலாச்சாரம் மற்றும் கலாச்சாரங்களுக்கு இடையேயான நல்லிணக்கத்தை மேம்படுத்துகிறது, அத்துடன் தெற்கு ஆஸ்திரேலிய பன்முகக் கலாச்சார சாசனத்திற்கு (சுருக்கமாக 'சாசனம்' என்று இனி குறிப்பிடப்படும்) அடிப்படையாக விளங்குகிறது. இந்தச் சாசனமானது, அனைத்து தெற்கு ஆஸ்திரேலியக் கொள்கை மேம்பாடு, அத்துடன் சேவைகளின் வடிவமைப்பு மற்றும் விநியோகத்திற்கு அடிப்படையான தொலைநோக்கம் மற்றும் வழிகாட்டுதலை தெற்கு ஆஸ்திரேலிய முகமைகள், அமைப்புகள், நிறுவனங்கள், வணிகங்கள் மற்றும் சமூகங்களுக்கு வழங்கும்.*

**தெற்கு ஆஸ்திரேலிய பன்முகக் கலாச்சார சாசனமானது பின்வருபவற்றை ஏற்றுக்கொள்கிறது:**

- தங்கள் கலாச்சார மற்றும் பாரம்பரிய நம்பிக்கைகளை நீண்ட காலமாகக் காத்து, ஒரு பல்வேறுபட்ட கலாச்சாரமாகப் பராமரித்து வளர்த்துவரும், அத்துடன் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தெற்கு ஆஸ்திரேலிய தேசத்தின் முதன்மையான மக்களாக விளங்கும் பழங்குடியின மக்களை, தெற்கு ஆஸ்திரேலிய நிலம் மற்றும் நீரின் பாரம்பரிய உரிமையாளர்கள் மற்றும் குடியிருப்பாளர்களாக ஏற்றுக்கொள்கிறது.
- எங்களுக்கு முன் வந்த தலைமுறையினரின் சாதனைகள் மற்றும் சவால்கள், புதிய மற்றும் வளர்ந்து வரும் சமூகங்களுடன் சேர்ந்து, தெற்கு ஆஸ்திரேலியாவின் அடையாளத்தை வடிவமைக்க உதவுகின்றன.

**இந்த சாசனம் அனைத்துத் தெற்கு ஆஸ்திரேலியர்களுக்குமானது, அத்துடன் இது பின்வரும் நோக்கங்களைக் கொண்டது:**

- கலாச்சார, மொழி, இன மற்றும் மத வேறுபாடுகளை அங்கீகரிப்பதன் மூலம் நமது சமூகத்தை இணைத்தல்.
- அறிவு, சிந்தனை மற்றும் முன்னோக்குப் பார்வையைச் செயல்திறனுடன் வெளிப்படுத்தவும், பரிமாறிக்கொள்ளவும், ஒரு சூழலை உருவாக்குவதன் மூலமாக, அனைத்துத் தெற்கு ஆஸ்திரேலியர்களையும் நமது பன்முகத்தன்மையின் செழுமை மற்றும் மதிப்பு பற்றிய ஆழமான புரிதலையும் மரியாதையையும் வளர்த்துக் கொள்ளச் செய்தல்.
- பன்முகக் கலாச்சாரக் கொள்கைகளின் வளர்ச்சிக்கும், நமது சமூகங்களுக்குப் பயனளிக்கும் மற்றும் நமது மாநிலத்தின் முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும் சேவைகளை வழங்குவதற்கும் ஒரு அடித்தளத்தை வழங்குதல்.
- அனைத்துத் தெற்கு ஆஸ்திரேலியர்களையும் உள்ளடக்கிய மற்றும் சமுதாயப் பொறுப்பு வாய்ந்த பணியிடங்கள் மற்றும் சமூகங்களை ஊக்குவித்தல்.

## சாசனக் கோட்பாடுகள்

**'தெற்கு ஆஸ்திரேலிய பன்முகக் கலாச்சார சாசனம்' (The South Australian Multicultural Charter), அனைத்துத் தெற்கு ஆஸ்திரேலியர்களும் பின்வரும் கொள்கைகளைப் பின்பற்றுவதற்கான அடித்தளமாக அமைகிறது:**

1. கலாச்சார, மொழி, இன மற்றும் மத ரீதியான பன்முகத்தன்மையை அங்கீகரித்தல், அத்துடன் இது நமது மாநிலத்திற்கு அளித்த மற்றும் தொடர்ந்து அளித்துவரும் பங்களிப்பை மதித்தல் மற்றும் மதிப்பளித்தல்.
2. நமது கலாச்சார, மொழி, இன மற்றும் மத ரீதியான வேறுபாடுகள் பற்றிய அறிவு மற்றும் புரிதலின் பரஸ்பர பரிமாற்றத்தில் ஈடுபட ஊக்குவித்தல்.
3. ஓர் ஒருங்கிணைந்த சமுதாயத்திலுள்ள வாழ்வின் அனைத்து அம்சங்களிலும் செழுமையுடன் வாழ்தல், வேலை பார்த்தல் மற்றும் கற்றல்.
4. பரஸ்பர மரியாதை, புரிதல், நியாயம், பாதுகாப்பு மற்றும் அவர்களின் கலாச்சாரம், மொழியியல், இனம் மற்றும் மத பின்னணியின் அடிப்படையிலான பாகுபாடுகளில் இருந்து சுதந்திரம் பெறுவதற்கான உரிமையைக் கொண்டிருத்தல்.
5. அவர்களின் கலாச்சார, மொழி மற்றும் மத ரீதியான பன்முகத்தன்மையை சட்டபூர்வமாகப் பாதுகாத்தல், வெளிப்படுத்தல், நடைமுறைப்படுத்தல் மற்றும் அவற்றைக் கொண்டாடக் கூடியதாக இருத்தல்.
6. நமது மாநிலத்தின் கல்வி, சமூக, கலாச்சார, பொருளாதார மற்றும் அரசியல் வாழ்க்கையில் பங்கேற்பதை ஆதரிக்கும் வாய்ப்புகள் மற்றும் சேவைகளை சமமாக அணுகும் சந்தர்ப்பத்தை வழங்குதல்.

Honourable Peter Malinauskas MP
Premier of South Australia

Honourable Zoe Bettison MP
Minister for Multicultural Affairs

Damien Walker
Chief Executive
Department of the Premier and Cabinet

தெற்கு ஆஸ்திரேலிய பல்கலாச்சார ஆணையமானது (The South Australian Multicultural Commission), அதன் பங்களிப்பை, தெற்கு ஆஸ்திரேலிய பன்முகக் கலாச்சார சாசனத்தின் வளர்ச்சிக்கு வழங்கியமைக்காக அங்கீகரிக்கப்படுகிறது. Tamil / தமிழ்